ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதிவிசேஷமானது

අංක 2020/3 - 2017 මැයි මස 22 වැනි සඳුදා - 2017.05.22

*2020/3 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*நியதிச் சட்டமுறையான விதிப்பு இல. : 4640.*

*விசேட இல. : கா/31*

***1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, காணிச் சீர்திருத்தச் சட்டம்***

*19 ஆம் பிரிவின் கீழான நியதிச் சட்ட முறை விதிப்பு*

*இமதூவை, வவுலுகலை எஸ்டேட் என்று முகவரி தந்துள்ள திரு. தயாவங்ஷ சந்திரசிறி ஹேவாவிதானை அவரினால் சட்டத்தின் 18 ஆம் பிரிவின் கீழ் நியதிச் சட்ட முறையானதொரு பிரகடனம் செய்யப்பட்டுள்ளதுடன், தற்போது அவர் காலமாகி உள்ளதால் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் கீழ் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி இந்த ஆணைக்குழுவினால் நியதிச் சட்டமுறையான குத்தகைக்காரருக்கு சொந்தமாகவிருந்த கமத்தொழில் காணிகளில் அவர் வைத்திருக்க அனுமதி வழங்கவேண்டிய பகுதியை நிர்ணயித்து அவரின் மரணசாதனச் சொத்துக்கு சட்ட முறையானதொரு விதிப்பு விதிக்கப்பட்டது. அவ்வாறு நியதிச்சட்ட முறையான குத்தகைக்காரருக்கு வைத்திருக்க அனுமதி வழங்கப்பட்ட கமத்தொழில் காணிப் பகுதிகள் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.*

*ரீ. ஏ. சுமனதிஸ்ஸ தாம்புகல,*
*தலைவர்,*
*காணிச் சீர்திருத்த ஆணைக்குழு.*

*காணிச் சீர்திருத்த ஆணைக்குழு,*
*இல. 475,*
*கடுவெல வீதி,*
*பத்தரமுல்லை,*
*2017, ஏப்பிறல் 28.*

***அட்டவணை***

*1. தென் மாகாணம், மாத்தறை மாவட்டத்தில் அத்துரலிய பிரதேச செயலாளர் பிரிவில் வெலிகம் கோறளை சிறு பிரிவில் வில்பிட்ட எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும், நில அளவையாளர் நாயகத்தினால் வரையப்பட்ட இறுதி கிராம வரைபட இல. 87 இன் மேலதிக இல. 40 இல் காட்டப்பட்டுள்ளதுமான அனுரசிறி பீ வத்த எனும் காணியில் 1.0925 ஹெக்டேயார்ஸ் (02 ஏக்கர் 2 றூட் 31.93 பேர்ச்சஸ்) அளவு கொண்ட 688 மற்றும் 689 ஆம் இலக்க காணித் துண்டுகளும் அதனுள்ளடங்கிய சகலதும்.*

*6- 162*